(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 71.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 ஜூலை 25, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

15/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்திக்கு வழங்கியுள்ள பங்களிப்பு, சதவீத அடிப்படையில் ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) தற்போதுள்ள சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தொடர்பில் செயற்படுகின்ற அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காக மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனம் ஒவ்வொன்றும் மேற்கொள்ளும் பணிப்பொறுப்புக்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

115/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்கள் சார்ந்ததாக தமக்கு வழங்கப்பட்ட கடமைகளையும் பொறுப்புக்களையும் உரிய முறையில் நிறைவேற்றத் தவறியமைக்காக குற்றம் சுமத்தப்பட்டுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த அலுவலர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் தற்போது வகிக்கும் பதவிகள் யாவை என்பதையும்;

(iii) அந்த அலுவலர்களில், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் இன்றளவிலும் பொறுப்புக்களை வகிக்கின்ற அலுவலர்கள் இருப்பார்களாயின், அந்த அலுவலர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

184/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பிளாந்துறை தொடக்கம் கொக்கட்டிச்சோலை வரையிலான வீதி புனரமைக்கப்படவில்லை என்பதையும்;

(ii) இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளைத் தெளிவூட்டிய போதிலும், இதுவரை மேற்படி வீதியைப் புனரமைப்பது தொடர்பான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iii) பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் உள்ளிட்ட இப்பகுதியிலுள்ள பெருமளவான மக்கள் தமது போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக மேற்படி வீதியைப் பயன்படுத்துகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், அம்பிளாந்துறை தொடக்கம் கொக்கட்டிச்சோலை வரையிலான வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

199/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் கடற்படுகைக்கு அருகாமையில் எரிவாயுக்கள் மற்றும் எண்ணெய் படிமங்களை ஆய்வு செய்வதற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள கம்பனிகளின் பெயர்கள் யாவை;

(ii) மேற்படி அனுமதிப்பத்திரங்களை வழங்குகையில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் யாவை;

(iii) மேற்படி ஆய்வுகளின் தற்போதைய முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

217/2024

கௌரவ ரோஹண பண்டார,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்தின் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அப்பணத் தொகை முதலீடு செய்யப்பட்டுள்ள கம்பனிகள் யாவையென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு முதலீட்டின் மூலமும் பெற்ற இலாபம் / நட்டம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

225/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு புதியதோர் அரசியலமைப்பு தேவை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) 'வளமான நாடு-அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தில் நிறைவேற்றதிகார சனாதிபதி முறையை இல்லாதொழித்து, விரைவில் புதியதோர் அரசியலமைப்பை முன்வைப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், புதியதோர் அரசியலமைப்பு முன்வைக்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

(iv) புதியதோர் அரசியலமைப்பினை வரைவுக்குட்படுத்தும் செயன்முறையானது, பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளும் தொடர்புபடுகின்ற, சர்வ கட்சி செயன்முறையாக இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) புதியதோர் அரசியலமைப்பினை முன்வைக்கும் செயன்முறைக்கு தேசிய ரீதியில் முன்னுரிமை வழங்காததற்கான காரணம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

508/2025

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கான வாகன இறக்குமதி இடைநிறுத்தப்பட்டதன் பின்னர், அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட தீர்வையற்ற வாகன உரிமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அத்தகைய உரிமங்களுக்கான வாகனங்களை இறக்குமதி செய்தல் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் யாது என்பதையும்;

(iii) அத்தகைய உரிமங்களின் கீழான வாகன இறக்குமதி இடைநிறுத்தப் பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், மேற்படி இடைநிறுத்தம் வலுவுடையதாக காணப்படும் காலப்பகுதி யாது என்பதையும்;

(v) அத்தகைய உரிமங்களின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படுமாயின், அதற்காகப் பின்பற்றப்படும் வழிமுறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

622/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் அறிக்கையிடப்பட்டுள்ள அனர்த்தங்களின் எண்ணிக்கை, அந்தச் சம்பவங்களால் அனர்த்தங்களுள்ளான ஆட்களின் எண்ணிக்கை மற்றும் குறித்த ஆட்களுக்கு வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அனர்த்த முகாமைத்துவத்திற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) உலகில் பெரும்பாலான நாடுகள் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதை அறிவாரா என்பதையும்;

(iv) அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் இலங்கை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1018/2025

கௌரவ பத்மசிரி பண்டார,— இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை, ஹிங்குரக்கொடயில் தேசிய கிரிக்கெட் மைதானமொன்று இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2024 ஆம் ஆண்டில் அந்த மைதானத்தில் ஒரு விழா நடாத்தப்பட்டதுடன், அவ்விழாவின்போது அதிகளவான பணம் அவசியமற்ற வகையில் செலவு செய்யப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பிலான விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பொலன்னறுவையில் ஒரு தேசிய மைதானம் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்த மைதானத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) நிர்மாணப் பணிகளில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக அந்த மைதானத்தின் பல பகுதிகள் உடைந்து வீழ்ந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது
## பிரேரணை முன்னறிவித்தல்கள்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— சிறப்புரிமை,— தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எரங்க குணசேகர அவர்கள் 2025 ஏப்ரல் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயங்கள், 118 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

---

## அனுதாபப் பிரேரணைகள்

1.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்.

2.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கௌரவ ஏ. பிலபிற்றிய.

3.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கௌரவ டபிள்யு.பீ. ஏக்கநாயக்க.

4.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கௌரவ லக்கி ஜயவர்தன.

5.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கௌரவ (திருமதி) மாலனீ பொன்சேக்கா.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்,— மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டத்தின் 64, 65, 66, 69 மற்றும் 70 ஆம் பிரிவுகளுடன் மற்றும் 45(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 84 ஆம் பிரிவின் கீழ் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 மார்ச் 27 ஆம் திகதிய 2429/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 யூன் 04 ஆம் திகதிய 2439/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.07.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— திருத்தப்பட்டவாறான 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பீடிக்கான வரியொன்றினை விதித்தல் தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 ஏப்ரல் 01 ஆம் திகதிய 2430/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.07.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதிக்கான கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1959 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதிக்கான கட்டுப்பாடு) சட்டத்தின் 7(1) மற்றும் 8(2) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 15 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையின் தவிசாளரினால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய 2343/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.07.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

நாணய மாற்றுண்டியல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

சமுர்த்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

இறப்பர் கட்டுப்பாடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — குழு ஆய்நிலை.

*13.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**